ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ வண்டார் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வண்டார் ॥

திருக்கண்ணபுரம் - 10

‡வண்டார் பூ மாமலர் மங்கை⋆ மண நோக்கம்
உண்டானே⋆ உன்னை உகந்துகந்து⋆ உன் தனக்கே
தொண்டானேற்கு⋆ என் செய்கின்றாய் சொல்லு⋆ நால்வேதம்
கண்டானே⋆ கண்ணபுரத்துறை அம்மானே! (1)

பெரு நீரும் விண்ணும்⋆ மலையும் உலகேழும்⋆
ஒரு தாரா நின்னுள் ஒடுக்கிய⋆ நின்னை அல்லால்⋆
வரு தேவர் மற்றுளர் என்று⋆ என்மனத்திறையும்
கருதேன் நான்⋆ கண்ணபுரத்துறை அம்மானே! (2)

‡மற்றும் ஓர் தெய்வம் உளதென்று⋆ இருப்பாரோ-
டுற்றிலேன்⋆ உற்றதும்⋆ உன்னடியார்க்கடிமை⋆
மற்றெல்லாம் பேசிலும்⋆ நின் திருவெட்டெழுத்தும்
கற்று நான்⋆ கண்ணபுரத்துறை அம்மானே! (3)

பெண்ணானாள்⋆ பேர் இளங்கொங்கையினார் அழல் போல்⋆
உண்ணா நஞ்சுண்டுகந்தாயை⋆ உகந்தேன் நான்⋆
மண்ணாளா! வாள் நெடுங்கண்ணி⋆ மது மலராள்
கண்ணாளா⋆ கண்ணபுரத்துறை அம்மானே! (4)

பெற்றாரும் சுற்றமும் என்று⋆ இவை பேணேன் நான்⋆
மற்றாரும் பற்றிலேன்⋆ ஆதலால் நின்னடைந்தேன்⋆
உற்றான் என்றுள்ளத்து வைத்து⋆ அருள் செய் கண்டாய்⋆
கற்றார் சேர்⋆ கண்ணபுரத்துறை அம்மானே! (5)

ஏத்தி உன் சேவடி⋆ எண்ணி இருப்பாரைப்⋆
பார்த்திருந்தங்கு⋆ நமன் தமர் பற்றாது⋆
சோத்தம் நாம் அஞ்சுதும் என்று⋆ தொடாமை நீ
காத்தி போல்⋆ கண்ணபுரத்துறை அம்மானே! (6)

www.prapatti.com

வெள்ளை நீர் வெள்ளத்து⋆ அணைந்த அரவணை மேல்⋆
துள்ளு நீர் மெள்ளத்⋆ துயின்ற பெருமானே⋆
வள்ளலே! உன் தமர்க்கென்றும்⋆ நமன் தமர்
கள்ளர் போல்⋆ கண்ணபுரத்துறை அம்மானே! (7)

மாணாகி⋆ வையம் அளந்ததுவும்⋆ வாள் அவுணன்
பூண் ஆகம் கீண்டதுவும்⋆ ஈண்டு நினைந்திருந்தேன்⋆
பேணாத வல்வினையேன்⋆ இடர் எத்தனையும்
காணேன் நான்⋆ கண்ணபுரத்துறை அம்மானே! (8)

நாட்டினாய் என்னை⋆ உனக்குமுன் தொண்டாக⋆
மாட்டினேன் அத்தனையே கொண்டு⋆ என் வல்வினையை⋆
பாட்டினால் உன்னை⋆ என் நெஞ்சத்திருந்தமை
காட்டினாய்⋆ கண்ணபுரத்துறை அம்மானே! (9)

‡கண்ட சீர்க்⋆ கண்ணபுரத்துறை அம்மானை⋆
கொண்ட சீர்த் தொண்டன்⋆ கலியன் ஒலி மாலை⋆
பண்டமாய்ப் பாடும்⋆ அடியவர்க்கெஞ்ஞான்றும்⋆
அண்டம் போய் ஆட்சி⋆ அவர்க்கதறிந்தோமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com